முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (31.7.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், திரைப்பட இயக்குநர் சந்தோஷ் சந்தித்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் 1 இலட்சம் சிறிய புகைப்படங்களைக் கொண்டு தான் உருவாக்கிய, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உருவம் கொண்ட புகைப்படத்தை வழங்கி, வாழ்த்துப் பெற்றார். உடன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஆர்.எஸ். பாரதி, டி.கே.எஸ். இளங்கோவன், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ். முருகன், திரைப்பட இயக்குநர்கள் ஆர்.கே. செல்வமணி, லிங்குசாமி ஆகியோர் உள்ளனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து தென்காசி மாவட்டம் தென்காசி புதிய பேருந்து நிலையம் அருகில் ரூபாய் 11.64 கோடி மதிப்பில் 2.15 ஏக்கர் நில பரப்பில் கட்டப்பட்டுள்ள தென்காசி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தை காணொளி காட்சி மூலம் துவக்கி வைத்தார்கள்.தென்காசி மாவட்ட காவல்துறை அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்,நெல்லை சரக காவல் துறை துணை தலைவர் பரவேஸ்குமார்,மாவட்ட ஆட்சியர் கமல் கிஷோர்,மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் சுரேஷ்குமார்,தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன்,வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. பழனி நாடார் எம்.எல்.ஏ.சதன் திருமலை குமார் எம்.எல்.ஏ. தென்காசி நகர் மன்ற தலைவர் சாதிர் ஆகியோர் உள்ளனர்.

திருப்பத்தூரில் மாணவர்களுக்கு சீருடைகள் - மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி!

அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் துவக்கி வைத்தார்!

சிவகங்கை, ஆக. 2 -

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் ஆறுமுகம் பிள்ளை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி பள்ளி வளாகத்தில் தமிழக முதல் வரின் விலையில்லா மிதி வண்டிகள் 11,381 மாணவ, மாணவிகள் 1 முதல் 8 வகுப் புவரை உள்ள மாணவ மாணவிகள் 68725 சீருடை கள் ஆகியவற்றினை வழங் கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட் சியர் திருமதி ஆசாஅஜித் தலைமையில் நடைபெற் றது. முதன்மை கல்வி அலு வலர் பாலமுத்து வரவேற் றுப் பேசினார். நிகழ்ச்சியில் 68725 சீருடைகள் 11381 முதல்வரின் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் பேசியதாவது. தமிழக முதல்வர் அவர்களின் சீரிய தலைமையில் அனைத்து துறைகளும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. அனைத்து துறைகளும் பல் வேறு திட்டங்களை தீட்டி அந்த திட்டங்கள் முறை யாக நிறைவேற்றப் படுகின் றது. அதற்கான சான்று இன்று மாணவ மாணவிக ளுக்கு சீருடைகள் மற்றும் விலையில்லா மிதிவண்டி வழங்குவது சான்றாகும். முன்பு பள்ளிகளில் சீருடை கிடையாது. மாணவரி டையே இதனால் பாரபட் சமான சூழ்நிலை நிலவியது. ஏற்றத்தாழ்வு ஏற்பட்டது.

இதை உணர்ந்த பெருந் தலைவர் காமராஜர், தலை வர் கலைஞர் அவர்கள் பள் ளிகளில் படிக்கும் அனைத்து மாணவர்களும் சீருடை திட்டத்தினை கொண்டு வந்தார்கள். அத்திட்டம் தொடர்ந்து தமிழக முதல் வர் தளபதி அவர்களால் இன்று அவைகள் நிறை வேற்றப் பட்டு வருகின்றது. இதனால் மாணவ மாணவி யர்க ளிடையே பாகுபாடு காண முடியாது. நன்கு கல்வி பயில முடியும். மாணவ மாணவிகள் நன் றாக படித்து அவர்கள் விரும்பும் பணிக்கு செல்வ தால் நாட்டின் பொருளா தாரம் உயரும் .தமிழக முதல்வர் தளபதி தலைமை யிலான ஆட்சியில் ஆரம் பக் கல்வி முதல் கல்லூரி வரை கட்டணம் இல்லா மல் படிப்பதற்கான உத வியை செய்து வருகிறார். தமிழகம் கல்வியில் முதல் மாநிலமாக வருவதற்கு முன்னாள் முதல்வர் தலை வர் கலைஞர் அவர்களின் முயற்சி காரணமாகும். அதனை தொடர்ந்து தமி ழக முதல்வர் அவர்களும் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார். கல் விக்கான நிதிகளையும் தாராளமாக ஒதுக்கி வருகி றார். தொலைநோக்கு பார் வையுடன் முன்னாள் முதல் வர்கள் காமராஜர் தலைவர் கலைஞர் ஆகியோர் வழி யில் தளபதி அவர்களும் செயல்பட்டு வருகிறார். காமராஜர் காலத்தில் ஓராசி ரியர் பள்ளி இருந்தது. தலை வர் கலைஞர் அவர்கள் காலத்தில் ஈராசிரியர் பள்ளி யாக மாற்றப்பட்டது. தமிழக முதல்வர் அவர்கள் அனைத்து பள்ளிகளில் அனைத்து வசதிகளும் செய்து தருமாறு உத்தரவிட் டுள்ளார் .இதனால் தமிழ கம் இந்தியாவில் கல்வியில் முதல் இடம் பெற்றுள்ளது. அழியாத செல்வம் என்பது கல்வியாகும். கல்வியை யாரும் திருட முடியாது. உங்களுடைய தேவைகளை கேட்காமலேயே தமிழக முதல்வர்அவர் கள் நிறை வேற்றித் தருகிறார். எனவே மாணவ - மாணவர்கள் கல் வியிலும் விளையாட்டுகளி லும் கவனம் செலுத்த வேண்டும். முதல் இடம் பெற வேண்டும். விளை யாட்டில் ஈடுபடுவதால் உடல் ஆரோக்கியம் அடை யும் .மன நிம்மதி ஏற்படும். கடந்த அ.தி.மு.க

ஆட்சியில் மேல்நிலைப் பள்ளி மாணவ மாணவிக ளுக்கு உரிய நேரத்தில் விலையில்லா மிதிவண்டி கள் வழங்கப்பட வில்லை . ஆனால் முதல்வர் தளபதி அவர்கள் பதவி ஏற்றதும் பிறப்பித்த உத்தரவின் பேரில் உரிய காலத்தில் விலையில்லா மிதிவண்டி கள் மாணவ மாணவிக ளுக்கு வழங்கப்படு கிறது . மிதிவண்டி வழங்கப்படுவ தால் மாணவ மாணவிக ளின் உடல்நலம் ஆரோக்கி யமாக இருக்கும். மாணவ -மாணவிகள் சைக்கிளில் செல்லும் பொழுது போக்கு வரத்து விதிகளை மதிக்க வேண்டும் . அதன்படி நடந்து கொள்ள வேண் டும். ஒழுக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும் .இந்த மிதிவண்டிகளை முறை யாக பராமரிக்க வேண்டும். இதனால் உங்களுக்கு நீண்ட நாட்களுக்கு இந்த மிதிவண்டி உபயோகமாக அமையும். இவ்வாறு அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் பேசினார். நிகழ்ச் சியில் திருப்பத்தூர் பேரூ ராட்சி மன்ற தலைவர் திரு மதி கோகிலராணி நாராயணன், துணைத் தலைவர் கான் முகமது ஆகி யோர் வாழ்த்துரை வழங்கி னார்கள் .இந்த நிகழ்ச்சியில் மாவட்ட சமூக நல அலுவ லர் திருமதி ரதிதேவி நன்றி கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலர் திருமதி ஜெய மணி, தலைமை ஆசிரியர் கள் திருமதி தவமணி, மலர் வழி, ரசியா பேகம், மாவட்ட கல்வி அலுவலர் உதயகுமார் தாசில்தார் மாணிக்கவாசகம், பேரூர் கழகச் செயலாளர் ஆர். கார்த்திகேயன், பேரூராட்சி கவுன்சிலர்கள் ஜிம் கண் ணன், மாவட்ட மாணவ ரணி அமைப்பாளர் கதி . ராஜ்குமார், மாவட்ட அய லக அணி துணை அமைப் பாளர் சன் சீமான் சுப் பையா, தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் காளிமுத்து, புதூர் கண்ணன் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே. எஸ். நாராயணன், மாவட்ட சிறுபான்மை நல அமைப்பாளர் என்.எம்.. சாக்ளா, ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார் உட்பட ஆசிரியர்கள்,

பெற்றோர்கள் கலந்து கொண்டார்கள் . நிகழ்ச்சியில் தி.புதுப்பட்டி அரசுபள்ளி,நாகப்பா மரு தப்பா பெண்கள் மேல்நி லைப் பள்ளி ஆகிய மாணவ மாணவிகளுக்கு முதல்வரின் விலையில்லா மிதிவண்டி கள், இலவச சீருடைகளை அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் வழங்கினார்.

தி.மு.க. வர்த்தகர் அணி

தூத்துக்குடி மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம் அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தூத்துக்குடி வடக்கு மாவட்டம், தூத்துக்குடி மாநகர வர்த்தகர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

தூத்துக்குடி வடக்கு மாவட்டம்
தூத்துக்குடி மாநகரம்

தலைவர் : எம்.சின்னத்துரை, 12ஏ, சுந்தரவேல்புரம் 2வது தெரு, தூத்துக்குடி.

துணைத் தலைவர் : ரா.ஜெயமுருகன், 51ஏ/2, அண்ணா நகர் 3வது தெரு, தூத்துக்குடி.

அமைப்பாளர் : சீ. ஆனந்தசேகர், 2எச்/1148/1, பாக்கியலெட்சுமி நகர், கதிர்வேல் நகர் மேற்கு, தூத்துக்குடி - 8.

துணை அமைப்பாளர்கள் : என்.எல். பாலமுருகன், 60 என், போல்பேட்டை, தூத்துக்குடி - 628 008. லெ. காசிராஜா, 10/598, பூப்பாண்டியாபுரம் மேற்கு, வ.உ.சி. நகர், தூத்துக்குடி -2. எஸ்.அன்புராஜ், 4ஏ/160, மச்சாது நகர், தூத்துக்குடி - 2. எஸ்.செல்வமுருகன், 111/66/13எப், சக்தி விநாயகபுரம், தூத்துக்குடி - 2. ஏ.செல்வகுமார், 2/180, அன்னை தெரசா மீனவர் காலனி, லூர்தம்மாள்புரம், தூத்துக்குடி - 2. பி.மாரிமுத்து, 1/ஜி, கருப்பசாமி கோவில் தெரு, பள்ளிவாசல் எதிரில், தூத்துக்குடி - 2. பி.எஸ்.வேல்பாண்டி, 16/4ஏ, திரவிய புரம் மெயின், தூத்துக்குடி-2.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 01.08.2024

காசி முத்துமாணிக்கம்
செயலாளர்,
தி.மு.க. வர்த்தகர் அணி

தலைமைச் செயலகத்தில் நேற்று (01.08.2024) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில் தமிழ் வளர்ச்சி, கலை பண்பாடு மற்றும் அருங்காட்சியகங்கள் துறையின் மூன்றாண்டு சாதனைகள் கையேடு மற்றும் புத்தகம் வெளியிடுதல் தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், அருங்காட்சியகங்கள் துறை ஆணையர் திருமதி கவிதா ராமு, தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் எஸ்.ஆர். காந்தி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சிவகங்கை மாவட்டம் சாலை கிராமத்தில்

ரூ.1.25 கோடியில் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார மையம்!

அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன் - ப.சிதம்பரம் எம்.பி. திறந்து வைத்தனர்!

சிவகங்கை. ஆக. 2-

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி ஒன்றியம் சாலை கிராமத்தில் முன் னாள் ஒன்றிய நிதி அமைச் சர் ப.சிதம்பரம் எம்.பி பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 1கோடியே 25 லட் சம் செலவில் அரசு ஆரம்ப சுகாதார மையம் மேம்ப டுத்தப்பட்டது.

மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார மைய கட்டிட திறப்பு விழா மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் தலை மையில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் முன்னாள் ஒன் றிய அமைச்சர் ப.சிதம்ப ரம் எம்.பி.ஆகியோர் திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினர்.

நிகழ்ச்சிக்கு திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. முன்னிலை வகித்தார்.

இந்த நிகழ்ச்சியில் முன் னாள் எம்.எல்.ஏ. சுப.மதி யரசன் மாவட்ட சுகாதார அலுவலர் விஜயசந்திரன், இளையான்குடி ஒன்றிய கழகச் செயலாளர்கள் ஆறு.செல்வராசன், வே. தமிழ்மாறன், இளையான் குடி ஒன்றிய குழு தலை வர் முனியாண்டி, மாவட்ட கவுன்சிலர் திருமதி ஆரோக்கிய சாந்தா ராணி, சாலை கிராம ஊராட்சி மன்ற தலைவர் ஆர். தங் கம், விவசாய அணி பா.காளிமுத்து, மாவட்டப் பிரதிநிதி வே.கருணாகரன் தகவல் தொழில்நுட்ப அணி கண் ணன், மற்றும் பொதுமக் கள் கலந்து கொண்டார் கள். வட்டார மருத்துவ அலுவலர் ஆரண் நன்றி கூறினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா!

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. தொழிலாளர் அணி சார்பில் நலத்திட்ட உதவிகள்!

PTC.G.செல்வராஜ் - மேயர் ரெ.மகேஷ் சிறப்புரையாற்றி நலஉதவிகள் வழங்கினர்!

கன்னியாகுமரி, ஆக. 2-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. தொழி லாளர் அணி சார்பில் முத்த மிழறிஞர் கலைஞர் அவர்க ளின் நூற்றாண்டு நிறைவு விழா, 101வது பிறந்தநாள் விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 29.07.2024 இறச்சகுளம் சந் திப்பு, ஆர்.கே.மஹாலில் வைத்து கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தொழி லாளர் அணி அமைப்பா ளர் இ.என் சங்கர் தலை மையில், தோவாளை கிழக்கு ஒன்றிய செயலா ளர் த.செல்வன், நாகர்கோ வில் மாநகர தொழிலாளர் அணி அமைப்பாளர் பூ.சிதம்பரம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற் றது.

மாநில தொழிலாளர் அணி செயலாளர் PTC.G. செல்வராஜ், கன்னியாகு மரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் சிறப்பு விருந்தி னர் களாக கலந்து கொண்டு 35 கட்டிட தொழிலாளர்க ளுக்கு உபகரணங்கள், 15 விவசாயிகளுக்கு மண் வெட்டி, 60 ஆட்டோ ஓட் டுநர்களுக்கு சீருடைகள், 650 மகளிருக்கு மளிகை பொருட்கள் போன்ற நலத் திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்கள்.

நிகழ்ச்சியில் மாநில மக ளிர் அணி செயலாளர் ஜெ.ஹெலன் டேவிட்சன், மாநில தொழிலாளர் அணி துணை செயலாளர் ஆர். வரதன், மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளர் என்.தாமரைபாரதி, சென்னை தெற்கு மாவட்ட துணை அமைப் பாளர் என்.கோவிந்தன், மாவட்ட துணைச் செய லாளர் எஸ்.கரோலின் ஆலி வர்தாஸ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.சதாசிவன், நாகர்கோ வில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த், மாவட்ட தொழிலாளர் அணி நிர்வாகிகள் உட் பட அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், பொது மக்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் முன்னாள் மாணவர்கள் சார்பில் அமைக்கப்பட்ட வள்ளல் அழகப்பா செட்டியாரின் திருவுருவச் சிலையினை பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்து வைத்தார். இந்த நிலையில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் க.ரவி, மாவட்ட ஆட்சியர் திருமதிஆஷாஅஜித், எஸ்.மாங்குடி எம்.எல்.ஏ. நகர்மன்றத்தலைவர் சே.முத்துதுரை, நகர்மன்ற துணைத்தலைவர் என். குணசேகரன், சுப.சின்னத்துரை, கே.ஆர்.ஆனந்த், ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. தொழிலாளர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, 101 வது பிறந்தநாள் விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் இ.என் சங்கர் தலைமையில், தோவாளை கிழக்கு ஒன்றிய செயலாளர் த.செல்வன், நாகர்கோவில் மாநகர தொழிலாளர் அணி அமைப்பாளர் பூ.சிதம்பரம் ஆகியோர் முன்னிலையில் மாநில தொழிலாளர் அணி செயலாளர் PTC.G.செல்வராஜ், மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் 35 கட்டிட தொழிலாளர்களுக்கு உபகரணங்கள், 15 விவசாயிகளுக்கு மண்வெட்டி, 60 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடைகள், 650 மகளிருக்கு மளிகை பொருட்கள் போன்ற நலத்திட்ட உதவிகளை வழங்கினர். நிகழ்ச்சியில் ஜெ.ஹெலன் டேவிட்சன், ஆர்.வரதன், என்.தாமரைபாரதி, என். கோவிந்தன், எஸ்.கரோலின் ஆலிவர்தாஸ், ஆர்.சதாசிவன், வழக்கறிஞர் ப.ஆனந்த், மாவட்ட தொழிலாளர் அணி நிர்வாகிகள் உட்பட அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.